# *DEPOSITION OF WITNESS*
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## SC No. 232/2023

PW: 2

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.சசிக்குமார் | Occupation: | விவசாயம் |
| Father's Name : | திரு.வீரையன் | Religion : | இந்து |
| Village : | தேனாம்படுகை | Age : | 34 |
| Taluk : | கும்பகோணம் | | |

Solemnly affirmed by Thiru.S.Allan Border, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 14th day of August 2024.

Signature of Witness.

(Accused present. Additional Public Prosecutor Present. Defence counsel present. )

முதல் விசாரணை :

நான் தேனாம்படுகையில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். என் அம்மா பெயர் மகாராணி. என் அண்ணன் பெயர் ராஜ்குமார். சம்பவம் நடந்தபோது தேனாம்படுகை வடக்கு தெருவில் உள்ள நம்பர் 1/100 ல் உள்ள எனது வீட்டில் தான் இருந்தேன். 17.09.2021 அன்று இரவு 9.30 மணியளவில் என் அண்ணன் கடைக்கு வீட்டிற்காக சாமான் வாங்குவதற்காக சென்றிருந்தார். அப்போது என் அண்ணன் கடையில் நின்றபோது அஜீத்தும் அய்யப்பனும்

பைக்கில் வந்து ஹாரன் அடித்து பைக்கை முறுக்கி அவரை பார்த்து முறைத்ததாகவும் ஏன்டா இப்படி செய்றீங்க என்று என் அண்ணன் கேட்டபோது நாங்கள் அப்படித்தான் செய்வோம் என்று கூறி சண்டை போட்டதாகவும், என் அண்ணன் வீட்டிற்கு வந்து கூறினார். தான் சென்று அவர்கள் வீட்டில் கேட்க போவதாக என் அண்ணன் கூறினார். அவங்க அப்பா அம்மாவிடம் சொல்லிவிட்டு வருவதாக கூறினார். என் அண்ணன் சென்ற சிறிது நேரத்தில் ஊரில் உள்ளவர்களின் சத்தம் கேட்டது. எனக்கு திருமணம் ஆகி அப்போது 20 நாட்கள் தான் ஆகியிருந்தது. விருந்திற்காக என் மாமா மகன் ஜெய்சிங்கும் வந்திருந்தார். நான் போனேன் ஒரே கூட்டமாக இருந்தது.

2) நானும் என் மாமா மகன் ஜெங்சிங்கும், பெரியப்பா மகன் ராம்குமார் இன்னும் ஐந்தாறு பேர் சேர்ந்து சத்தம் கேட்ட இடத்தை நோக்கி சென்றோம். கூட்டமாக இருந்தது. பைக்கை முறுக்கிறாப்ல கேட்டா உன் பையன் திட்டிறாப்ல என்று என் அண்ணன் கேட்டுக் கொண்டிருந்தார். நாங்கள் அப்படித்தான் செய்வோம், நீ பெரிய ஆள் புண்டையா அஜீத் கேட்டார், அஜீத்தின் அப்பா ஜெயக்குமார் அவனை விடாதீங்கடா வெட்டிக் கொல்லுங்கடா என்று கூறினார். ஏதோ பிளான் பண்ணியதுபோல் அஜீத் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து இத்தோடு செத்துபோடா என்று கூறி எனது அண்ணனின் பின்னந்தலையில் வெட்டினார். ஜெயக்குமாரும் ஒரு அருவாளை எடுத்து என் அண்ணனை வெட்டினார். அதை தடுத்தபோது என் அண்ணனின் இரண்டு கைகளிலும் வெட்டு விழுந்தது. என்

அண்ணனின் வலது கை வெட்டி தொங்கியது. வலது கை விரல்களும் தொங்கியது. வலது உள்ளங்கையின் மேல் பகுதியும் வெட்டுப்பட்டு தொங்கியது. அவரது மருமகன் அய்யப்பன் என் அண்ணனை முதுகில் காலால் உதைத்து செத்துப்போடா தேவடியா மகனே என்று திட்டினார். வாசுகி அவனை விடாதீங்கடா அடிச்சி கொல்லுங்கடா அவன விடக்கூடாதுடா என்று கூறினார். அஜீத் என் அண்ணனை மீண்டும் தலையின் வலது பக்கத்தில் வெட்டி விட்டார். நாங்கள் தடுத்தும் எங்களால் தடுக்க முடியவில்லை. என் அண்ணனுக்கும் முடியவில்லை. அவர்கள் ஓடி விட்டார்கள்.

3) என் பெரியப்பா மகன் ராம்குமார் ஆம்புலன்சிற்கு போன் செய்து தகவல் கூறினார். கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். இங்கு பார்க்க முடியாது என்று கூறியதால் திருநாகேஸ்வரம் பைபாசில் உள்ள AVR மருத்துவமனைக்கு என் அண்ணனை அழைத்து சென்றோம். அவர்கள் என் அண்ணனுக்கு சீரியசாக உள்ளதாகவும், முதலுதவி சிகிச்சை அளிப்பதாகவும் கூறினார்கள். போலீசாரும் வந்து விட்டார்கள். அரை மணி நேரத்தில் என் அண்ணனுக்கு நினைவு வந்து விட்டது. விசாரித்தார்கள் என் அண்ணன் போலீசாரிடம் பதில் கூறினார். கையொப்பம் போட சொன்னபோது என் அண்ணனால் போட முடியவில்லை அதனால் என் அண்ணன் என்னை கையொப்பம் இட சொன்னார். நானும் என் மாமா மகன் ஜெயில்சிங்கும் கையொப்பம் செய்து கொடுத்தோம். 5 நாட்கள் மருத்துவமனையில் தான்

சிகிச்சையில் இருந்தார். புகார் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். எங்களால் பணம் கட்ட முடியாததால் வீட்டிற்கு அழைத்து வந்து வாரத்திற்கு ஒருமுறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். 6 மாதங்கள் வரை என் அம்மாதான் என் அண்ணனுக்கு சோறு ஊட்டினார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ;

வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

D SHANMUGA PRIYA

Digitally signed by D SHANMUGA PRIYA
Date: 2024.08.14 17:03:46 +0530

*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam.*